THE HINDU
Dated 02.03.2024

# Don't make appeal on basis of caste, religion, EC tells parties

Sreeparna Chakrabarty
NEW DELHI

Ahead of the upcoming Lok Sabha election, the Election Commission (EC) has directed political parties, especially star campaigners, to maintain decorum while campaigning and refrain from making appeals on the basis of caste or communal politics or make false statements, which can mislead voters.

In an advisory issued to all political parties on Friday, the EC cited previous examples of such indirect violations using known methodologies to avoid strictures under the model code of conduct (MCC), and conveyed that "stern action would be taken against direct or indirect MCC violations".

The advisory comes days before the schedule for elections to the Lok Sabha and four State Assemblies is expected. The MCC comes into effect with the announcement of the poll dates.




The Election Commission also asked parties not to make false statements to mislead voters.

The EC said in the advisory that political parties, candidates and star campaigners should not make any appeal on the basis of caste or communal feelings of the electors. No activity, which may aggravate existing differences or create mutual hatred or cause tension between different castes or communities, religious and linguistic groups, should be attempted.

"The political parties and leaders shall not make false statements and utterances without factual basis aimed at misleading the voters. Criticism of other parties or their workers on the basis of unverified allegations or on distortions shall be avoided," the advisory further said.

### 'No personal attacks'

It said that no aspect of the private life, not connected with the public activities, of the leaders or workers of other parties is to be criticised.

Low-level personal attacks to insult the rivals shall not be made. It also warned the parties against giving advertisements masquerading as news items in the media.

Deccan Chronicle

Dated: 02.03.2024

# EC warns parties ahead of LS poll

VINEETA PANDEY | DC
NEW DELHI, MAR. 1

Ahead of the Lok Sabha polls, the Election Commission of India (ECI) warned political parties to maintain decorum, have utmost restraint and avoid direct or indirect violation of Model Code of Conduct during poll campaigning.

In its directive issued on Friday, the ECI said during campaigning, candidates and star campaigners must remember that no aspect of the private life of the leaders or workers of other parties is to be targeted. Low level personal attacks to insult the rivals shall not be made. No places of worship are to be used for election propaganda or electioneering and references which ridicule the relations between devotee and deity are not to be made.

The political parties and leaders cannot make false statements, utterances without factual basis aimed at misleading the voters. Criticism of other parties or their workers on the basis of unverified allegations or on distortions needs to be avoided, the ECI directive added.

The poll body has put additional responsibility on star campaigners and candidates to see no violation is committed.

Taking note of the various trends and cases of plummeting levels of political campaign discourse in recently held elections, the ECI has asked all political parties to raise the bar of election campaigning to "issue" based debate. The ECI further said that while enjoying the privileges granted by Section 77, star campaigners also bear the responsibility of upholding the highest ethical standards during election campaigns. "The ECI will assess any indirect MCC violations as per advisory as a fair basis to re-work the notices to be given in terms of time and content in issues in the forthcoming elections. For the general election and four state Assemblies polls, all phases and geographical area of elections shall be the basis to determine "repeat" offences," the ECI said.

D.T. NEXT
Dated: 02.03.2024

## NEWS DIGEST

### Don't mock devotee-deity relation, EC warns parties

NEW DELHI: Ahead of the Lok Sabha polls, the Election Commission on Friday asked parties and their leaders to refrain from seeking votes based on caste, religion and language, and not insult the devotee-deity relation or make any suggestion of a divine censure. Temples, mosques, churches, gurdwaras or any other place of worship should not be used for electioneering, it added. ▸ More on P6

# EC warning: No talk of religion, caste, devotee-deity relationship during polls

**NEW DELHI: Ahead of the Lok Sabha polls, the Election Commission asked parties and their leaders to refrain from seeking votes on the basis of caste, religion and language, and not insult the devotee-deity relation or make any suggestion of a divine censure.**

Temples, mosques, churches, gurdwaras or any other place of worship should not be used for poll propaganda or electioneering, the commission said in its advisory to parties, warning their candidates and star campaigners they will face stern action, rather than just 'moral censure' as is the practice, for any violation of Model Code of Conduct.

The poll authority has issued advisories to parties in the past too, but the latest one comes ahead of the parliamentary elections. It said that the star campaigners and candidates who have received notices in past will face stern action for repeat violation of model code.

**Temples, mosques, churches, gurdwaras or any other place of worship should not be used for electioneering, the advisory says**

The advisory comes days before the model code is expected to come into effect with the likely announcement of the Lok Sabha and four state assembly polls later this month.

Chief Election Commissioner Rajiv Kumar had recently emphasised that political parties should foster ethical and respectful discourse which inspire rather than divide, promote ideas instead of personal attacks.

The Commission's advisory has now formally set the stage for ethical political discourse and cut the clutter in 2024 General Elections, an official said, adding the methodical approach to MCC violations has prepared the ground for civilised campaigning.

It cautioned that all phases and geographical area of elections will be the basis to determine "repeat" offences of the poll code and its advisory.

# *Lok Sabha poll contestants quadruple between 1952-2019*

**NEW DELHI: The number of candidates contesting the Lok Sabha polls has seen a rise of over four times from 1,874 in 1952 to 8,039 in 2019, according to official data.**

The average number of candidates per constituency has jumped from 4.67 to 14.8 in the same period, the data showed.

With the Lok Sabha polls nearing, the battleground is set but it is yet to be seen how many candidates are in the fray even as the proportion of candidates contesting has seen a rise since 1952 when the first elections were held. On an average, there used to be only around three to five contestants per Lok Sabha seat until the sixth Lok Sabha elections in 1977 but in the last elections 14.8 candidates on average contested from per constituency across the country.

According to an analysis by non-profit organisation PRS Legislative Research, there were 8,039 candidates contesting from 542 Parliamentary constituency seats in the 2019 general assembly elections. A closer look at the last Lok Sabha polls in 2019 show that on an average, among all the states, Telangana had the highest average number of candidates contesting. This is primarily due to 185 contestants from Nizamabad. Excluding Nizamabad, the state's average number of contestants would be 16.1.

After Telangana, Tamil Nadu had the highest average of independent candidates contesting in last election.

Of the candidates in each constituency in Tamil Nadu, an average of two-thirds contested as independent candidates.

After Nizamabad, the second highest number of candidate representation was seen in Belgaum, Karnataka.

# HC directs MDMK to make fresh plea before EC for 'top'


**CHENNAI: The Madras High Court directed MDMK to make a fresh representation before the Election Commission (EC) seeking 'Top' symbol and also directed the EC to pass orders.**

A division bench comprising Justice SS Sundar and G Arul Murugan heard the petition preferred by MDMK seeking 'Top' symbol for the ensuing 2024 Parliament and 2026 Assembly elections.


The counsel for MDMK submitted that various representation has made before the EC, but no action has been taken till now, since we expecting the election dates may announce anytime, said the counsel and sought HC to intervene in the issue.

Niranjan Rajagopal, the standing counsel for MDMK submitted that the petitioner party made their representation under para 10 - A of Election Symbols (Reservation and Allotment) order, 1968, instead of para 10-B. It was submitted to make fresh representation and order will be passed on seniority. The standing counsel also sought time to get instructions. After the submission, the bench directed MDMK to make fresh representation and pass appropriate order. The matter was posted to March 7 for further submission.

THE HINDU - TAMIL Dated 02.03.2024



↑ மக்களவை தேர்தல் பாதுகாப்பு பணிக்காக கொச்சியில் இருந்து ரயில் மூலமாக கோவை வந்த துணை ராணுவப் படை வீரர்கள். படம்: ஜெ.மனோகரன்



↑ சென்னை எழும்பூரில் இருந்து சர்க்கார் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் ஆந்திர மாநிலத்துக்கு நேற்று புறப்பட்டு சென்ற மத்திய தொழில் பாதுகாப்பு படையினர்.

மக்களவை தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதற்காக

# துணை ராணுவ படையினர் தமிழகம் வருகை

## ▶ தேவைப்படும் பகுதிகளுக்கு பிரித்து அனுப்பும் பணி மும்முரம்

● சென்னை/ கோவை

மக்கள்வை தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட தமிழகம் வந்துள்ள துணை ராணுவ படையினரை தேவைப்படும் பகுதிகளுக்கு அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

மக்களவை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இந்த நிலையில், முன்னதாகவே சட்டம் - ஒழுங்கு கண்காணிப்புக்காகவும், பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவும், துணை ராணுவ படையினரை மத்திய உள்துறை தமிழகத்துக்கு அனுப்புகிறது. முதல் கட்டமாக தமிழகத்துக்கு 25 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதில், நேற்று 15 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படையினர் தமிழகத்துக்கு வருவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, முதல் கம்பெனி துணை ராணுவ படையினர் நேற்று முன்தினம் இரவே மங்களூருவில் இருந்து ரயில் மூலம் சென்னை சென்ட்ரல் வந்தனர். அவர்கள் புதுப்பேட்டையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 7 மணி நிலவரப்படி, சென்னைக்கு துணை ராணுவ படையை சேர்ந்த 2 கம்பெனி, ஆவடி, தாம்பரத்துக்கு தலா 1 கம்பெனி, கோவைக்கு 3 கம்பெனி என மொத்தம் 7 கம்பெனி வீரர்கள் வந்துள்ளனர்.

துணை ராணுவத்தினரை தேவைக்கேற்ப பல்வேறு பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இன்று (மார்ச் 2) காலைக்குள் 8 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படை வீரர்கள் மதுரை, சேலம், நெல்லை உள்ளிட்ட இடங்களுக்கு செல்ல இருக்கின்றனர்.

எஞ்சியுள்ள 10 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படையினர் வரும் 7-ம் தேதி தமிழகம் வர இருக்கின்றனர். பல்வேறு நகரங்களுக்கு செல்லும் அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள். மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்த பிறகே, அவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவார்கள் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னதாக தமிழகத்துக்கு 175 கம்பெனி வீரர்கள் வர உள்ளனர்.

இதற்கிடையே, சென்னையில் துணை ராணுவ படை வீரர்கள் தங்குவதற்கு 24 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு 4 ஆயிரம் பேர் வரை தங்கும் வசதி உள்ளது.

**கொச்சியில் இருந்து கோவைக்கு..**

கேரள மாநிலம் கொச்சியில் இருந்து 3 கம்பெனி மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் நேற்று ரயில் மூலம் கோவை வந்தனர். ஒரு கம்பெனியில் 92 பேர் என மொத்தம் 276 பேர் வந்துள்ளனர். கோவை மாநகர், கோவை சரகம், சேலம் மாநகர் ஆகிய இடங்களுக்கு தலா ஒரு கம்பெனி துணை ராணுவ படையினர் பிரித்து அனுப்பப்பட்டனர்.

THE HINDU - TAMIL Dated: 02.03.2024

### தேர்தல் தேதி அறிவித்த 2 மணி நேரத்துக்குள்

# அரசாணை பதிவேட்டை துறை செயலர்கள் புகைப்படம் எடுத்து அனுப்ப வேண்டும்

### தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவு

● சென்னை

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு, எந்த புதிய திட்டத்துக்கான அரசாணையும் பிறப்பிக்க கூடாது. இதுதொடர்பான பதிவேட்டில், கடைசி அரசாணைக்கு கீழே கோடு வரைந்து, கையெழுத்திட்டு அதை புகைப்படம் எடுத்து 2 மணி நேரத்துக்குள் அனுப்ப வேண்டும் என்று அரசுத் துறைகளின் செயலர்களுக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, நடத்தை விதிகள் அமலான பிறகு, அரசின் புதிய திட்டங்களை அறிவிக்கவோ, திட்டங்களுக்கான புதிய அரசாணைகளை வெளியிடவோ கூடாது. ஆனால், கடந்த தேர்தல்களின்போது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு, அதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டதுபோல, முன்தேதியிட்டு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. வரும் தேர்தலில் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**தேர்தல் அறிவிப்பு...**

விரைவில் தேர்தல் அறிவிப்புவெளியாகும்எனதெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடகங்களில் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதும், சம்பந்தப்பட்ட துறைகளின் செயலர்கள், துறையின் அரசாணை பதிவேட்டில் கடைசியாக பதிவுசெய்யப்பட்டுள்ள அரசாணைக்கு கீழ் ஒரு கோடு வரைந்து, அதில் கையொப்பமிட்டு, அந்த பக்கத்தை புகைப்படம் எடுத்து, தலைமை தேர்தல் அதிகாரியின் அலுவலகத்துக்கு 2 மணி நேரத்துக்குள் அனுப்ப வேண்டும்.

கடந்த தேர்தலின்போது பின்பற்றிய அதே நடைமுறை தற்போதும் பின்பற்றப்பட வேண்டும். இதன்மூலம், குற்றச்சாட்டுகளை தவிர்க்க முடியும். ஒருவேளை, சம்பந்தப்பட்ட துறை செயலர் இல்லாதபட்சத்தில், அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரி அப்பணியை மேற்கொண்டு உரிய காலவரையறைக்குள் புகைப்படத்தை அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

The CEO Tamil Nadu informed that the secretaries of each department should take photograph of the last page of GO Register and sent it to O/o CEO, TN within 2 hours of Election date announcement

# சீமான் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னம் மறுப்பு

### 'இந்தமுறை சின்னத்தை மாற்றிவிடுங்களேன்' என நீதிபதி நகைச்சுவை

மக்களவைத் தேர்தலில் தங்களுக்கு கரும்பு விவசாயி சின்னம் வழங்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி நாம் தமிழர் கட்சி சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு விசாரணை டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மன்மோகன் தலைமையிலான அமர்வில் நேற்று நடைபெற்றது. அப்போது சீமான் தரப்பில், பல ஆண்டுகளாக கரும்பு விவசாயி சின்னத்தில் தான் போட்டியிட்டு வருகிறோம். எனவே இந்த முறையும் இந்த சின்னத்தை எங்களுக்கே ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி மன்மோகன், " பொது சின்னம் பட்டியலில் உள்ள அந்த சின்னத்தை முதலில் கோருபவர்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது. அதன்படி அந்த சின்னம் தற்போது வேறு ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் என்ன தவறு இருக்கிறது. குறிப்பிட்ட கட்சிக்காக ஆணையத்தின் நடைமுறையை மாற்ற முடியாது.

மேலும் நாம் தமிழர் கட்சி இன்னும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத கட்சி. அப்படியிருக்கும்போது எப்படி ஒரு குறிப்பிட்ட சின்னத்தை உரிமை கோர முடியும் என்றார்.



மேலும் தலைமை தேர்தல் ஆணையம் தரப்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. அப்போது நாம் தமிழர் கட்சி சார்பில், " பொது சின்னம் கோருவதற்கான கால அவகாசம் இன்னும் உள்ளது. சின்னத்தை எங்களுக்கு ஒதுக்க மறுப்பது ஏற்புடையதல்ல" என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி மன்மோகன், "அந்த சின்னம் உங்களுக்கு கிடைக்க அதிர்ஷ்டமில்லை போல, எனவே அதை இந்தமுறை மாற்றி விடுங்களேன்" என நகைச்சுவையாக கருத்து தெரிவித்தார். அதன்பிறகு இதுதொடர்பாக உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் எனக்கூறினார்.

The Sugarcane Farmer Symbol cannot be allotted to Naam Tamilar party.

DAILY THANTHI Dated: 02.03.2024



நாடாளுமன்ற தேர்தல் பணிக்காக கேரள மாநிலம் கொச்சியில் இருந்து நேற்று கோவைக்கு ரெயில் மூலம் வந்த துணை ராணுவத்தினரை படத்தில் காணலாம்.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி

# தமிழகத்துக்கு துணை ராணுவ படையினர் வருகை

சென்னை, மார்ச்.2-

நாடாளுமன்ற தேர்தல் பாதுகாப்புக்காக தமிழகத்துக்கு துணை ராணுவப் படையினர் வந்துள்ளனர்.

## நாடாளுமன்ற தேர்தல்

நாடாளுமன்றத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. நாடு முழுவதும் உள்ள 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் நாடாளுமன்ற தேர்தலை அமைதியாக நடத்தி முடிக்க இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் சென்று, அங்குள்ள மாநில தேர்தல் அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். இன்னும் ஓரிரு நாட்களில் நாடாளுமன்ற தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்க இருக்கிறது.

## தமிழகத்தில் 4 முனைப்போட்டி

அனேகமாக, 7 கட்டங்களாக நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் தமிழ்நாட்டுக்கு முதல் கட்டமாகவே தேர்தல் வந்துவிடும் என்று தெரிகிறது. இதனால், அரசியல் கட்சிகள் வேகவேகமாக கூட்டணி மற்றும் தொகுதி பங்கீட்டை விரைந்து முடிக்க தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் முடிந்தால் தான், ஒவ்வொரு கட்சியும் தங்களது வேட்பாளர்களை அறிவிக்க முடியும். தமிழகத்தை பொறுத்தவரை 4 முனைப் போட்டி நிலவும் என்றே தெரிகிறது. அதாவது, தி.மு.க. தலைமையில் ஓர் அணியும், அ.தி.மு.க. தலைமையில் ஓர் அணியும், பா.ஜனதா தலைமையில் ஓர் அணியும் போட்டியிடும் என்று தெரிகிறது. இதுபோக, நாம் தமிழர் கட்சி தனித்து களம் காண இருக்கிறது.

## தேர்தல் பிரசாரம்

நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட இன்னும் சில தினங்களே இருக்கிறது. தேதி அறிவிக்கப்பட்டால், உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும். அதன்பிறகு, அரசு புதிய அறிவிப்புகளையோ, அரசாணைகளையோ வெளியிட முடியாது.

அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்த உடனேயே பிரசாரமும் சூடுபிடித்து விடும். எனவே, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்காக, அதற்கு முன்னதாகவே ஒவ்வொரு மாநிலத்துக்கும் துணை ராணுவப் படையினர் அனுப்பப்படுவார்கள்.

## துணை ராணுவ படையினர் வருகை

அந்த வகையில், தமிழ்நாட்டுக்கு 25 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படையினர் வரவழைக்கப்படுவார்கள் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு ஏற்கனவே தெரிவித்து இருந்தார். ஒரு கம்பெனியில் துணை ராணுவ படையை சேர்ந்த 90 வீரர்கள் இருப்பார்கள்.

முதற்கட்டமாக நேற்று 15 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படையினர் தமிழகத்துக்கு வருவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சென்னைக்கு முதல் கம்பெனி துணை ராணுவ படையினர் நேற்று முன்தினமே மங்களூருவில் இருந்து ரெயில் மூலம் சென்னை சென்டிரல் வந்தனர். அவர்கள் புதுப்பேட்டையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் தங்கியுள்ளனர்.

## தேர்தல் பாதுகாப்பு பணி

நேற்று மாலை 7 மணி நிலவரப்படி, சென்னைக்கு துணை ராணுவ படையை சேர்ந்த 2 கம்பெனியும், ஆவடி மற்றும் தாம்பரத்துக்கு தலா 1 கம்பெனியும், கோவைக்கு 3 கம்பெனியும் என 7 கம்பெனி வீரர்கள் வந்துவிட்டனர்.

இன்று காலைக்குள் மீதமுள்ள 8 கம்பெனியை சேர்ந்த துணை ராணுவ படை வீரர்கள் மதுரை, சேலம், நெல்லை உள்ளிட்ட இடங்களுக்கு செல்ல இருக்கிறார்கள்.

மீதமுள்ள 10 கம்பெனி துணை ராணுவ படையினர் வருகிற 7-ந்தேதி (வியாழக்கிழமை) தமிழகம் வர இருக்கின்றனர். பல்வேறு நகரங்களுக்கு செல்லும் அவர்கள் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவுக்கு பிறகே இனி அவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவார்கள்.

The paramilitary force arraived in Tamil Nadu for security duties for GELS. 2024.

DINA MALAR

Dated: 02.03.2024

# கை நழுவும் சீமான் சின்னம் நீதிபதிகள் ஆதங்கம்

**புதுடில்லி, மார்ச் 2–**

நாம் தமிழர் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னத்தை ஒதுக்க முடியாது என, டில்லி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கின் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.



சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, கரும்பு விவசாயி சின்னத்தில் இதுவரை போட்டியிட்டு வந்தது.

இந்நிலையில் தலைமை தேர்தல் கமிஷன், கரும்பு விவசாயி சின்னத்தை, கர்நாடகாவைச் சேர்ந்த பாரதிய பிரஜா ஐக்கியதா கட்சிக்கு ஒதுக்கியது. இதை எதிர்த்து நாம் தமிழர் கட்சி சார்பில் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதன் விபரம்:

கடந்த 2021 தமிழக சட்டசபை தேர்தலில் பெற்ற ஓட்டுகளின் அடிப்படையில், தமிழகத்தின் மூன்றாவது பெரிய கட்சியாக நாம் தமிழர் உள்ளது.

அங்கீகரிக்கப்படாத கட்சியாக இருப்பினும், சட்டசபை தேர்தல், உள்ளாட்சி மற்றும் இடைத் தேர்தல்கள் உட்பட ஆறு தேர்தல்களை இதுவரை சந்தித்துள்ளது.

அனைத்திலுமே, கரும்பு விவசாயி சின்னத்தை பயன்படுத்தி வந்துள்ளோம்.

கடந்த 2019 லோக்சபா தேர்தலின் போது, தலைமை தேர்தல் கமிஷனின் இலவச தேர்தல் சின்ன பட்டியலில் இருந்து, தேர்தல் சின்ன ஒதுக்கீடு ஆணையின் படி, கரும்பு விவசாயி சின்னத்தை தேர்ந்தெடுத்தோம்.

கடந்த 2021 மற்றும் 2022ல் நடந்த தமிழக உள்ளாட்சி தேர்தல்களிலும், அதே சின்னத்தை தமிழக தேர்தல் ஆணையம் எங்களுக்கு ஒதுக்கியது.

அப்படி இருக்கையில், கர்நாடகாவைச் சேர்ந்த பாரதிய பிரஜா ஐக்கியதா கட்சிக்கு, கரும்பு விவசாயி சின்னத்தை தலைமை தேர்தல் கமிஷன் ஒதுக்கி உள்ளது.

எனவே, அந்த ஒதுக்கீட்டை ரத்து செய்து, கரும்பு விவசாயி சின்னத்தை எங்களுக்கு ஒதுக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, கரும்பு விவசாயி சின்னத்தை நாம் தமிழர் கட்சிக்கு ஒதுக்க தேர்தல் கமிஷன் தரப்பு எதிர்ப்பு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, 'கரும்பு விவசாயி சின்னத்தில் உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. அதனால், சின்னத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

'இந்த விவகாரத்தில் உங்களுக்கு உதவ முடியாது' என, நாம் தமிழர் கட்சி தரப்பிடம் வேதனையுடன் தெரிவித்த நீதிபதிகள், தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தனர்.

The sugarcane farmer symbol cannot be alloted to Naam Tamiler party.

## விஜய் கட்சி பதிவு என்னாச்சு?

**சென்னை, மார்ச் 2–**

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில், நடிகர் விஜய் துவங்கியுள்ள கட்சியை பதிவு செய்வதற்கான விண்ணப்பம், பிப்., 2ல் தாக்கல் செய்யப்பட்டது.

விண்ணப்பம் ஏற்கப்பட்டதா என்பதை, தமிழக வெற்றிக் கழகம் இன்னும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. கடந்த பிப்., மாதம், முறையான வழிமுறைகளை பின்பற்றி விண்ணப்பம் செய்த பல்வேறு கட்சிகளை, தேர்தல் கமிஷன் அங்கீகரித்துள்ளது. இதுகுறித்த விபரங்கள், தேர்தல் கமிஷன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளன.

ஆனால், த.வெ.க., பதிவு குறித்த விபரம் இன்னும் வெளியாகவில்லை. எனவே, தேர்தல் கமிஷன் அதிகாரிகளை சந்திக்க, நிர்வாகிகள் டில்லி செல்லவுள்ளனர்.

The representative of Tamizhaga vetri kazhagam party has decided to meet the EC officials regarding registration of their party name.